# நம்பிக்கையின் சங்கீதங்கள்

# Psalms For Hope.

## நோக்கம்:

வாழ்க்கை என்பது எளிமையாக இருப்பதில்லை. நாம் வளர வளர வாழ்க்கையானது கடினமாக மாறுகிறது. தோல்விகள், ஏமாற்றங்கள், தூரோகங்கள் மற்றும் எதிர்பாராத கஷ்டங்கள் எல்லாவற்றையும் நாம் நம்முடைய வாழ்க்கையில் அனுபவிக்கிறோம். நாம் வாழ்க்கின்ற இந்த 21 – நூற்றாண்டு நம்மை எதை நோக்கி கொண்டு செல்கிறது ?. ஒருபக்கம் நம்முடைய எல்லாருக்கும் மிகப்பெரிய தலைவலியாக இருப்பது நம்முடைய பொருளாதாரம். இன்னொரு பக்கம் வாழக்கையில் இருக்க கூடிய ஏக்கங்கள். என்னுடைய எதிர்காலம் எப்படி இருக்க போகிறதோ? என்கிற பயம். இதைப்போன்ற தருணங்களில் நமக்கு தேவையானது என்ன? **அது தான் நம்பிக்கை.**

**சங்கீதங்களில் இருந்து நமக்கான நம்பிக்கைகள்:**

வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளில் நமக்கு நம்பிக்கை தரும் புத்தகமாய் சங்கீதம் இருக்கிறது. ரோமர் 15:4 யில் நாம் இப்படியாக படிக்கிறோம். “தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் **நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு**, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது”. தேவனுடைய வார்த்தை தான் நமக்கு ஆறுதலையும் நம்பிக்கையும் தர கூடியதாக இருக்கிறது. மேற் குறிப்பிடப்பட்ட வசன பகுதியானது, பழைய ஏற்ப்பாடு நமக்கு நம்பிக்கை தரும்படியாக போதனையாக கொடுக்கப்பட்டிருக்கிறது என கூறுகிறது.

நமக்கு நம்பிக்கை தருவதில் பழைய ஏற்ப்பாட்டின் சங்கீத புத்தகம் மிக முக்கியமான பங்கை வகிக்கிறது. நம்பிக்கையை மாத்திரமே இல்லாமல், உபத்திரவத்தின் மத்தியில் இருக்கிற நமக்கு அது உத்வேகத்தை தரும் வல்லமையுள்ள வசன பகுதிகளாய் இருக்கின்றன. இந்த சங்கீத பகுதிகளில் இருந்து நாம் இந்த 21 – நூற்றாண்டில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாம் நம்பிக்கை பெற்றுக்கொள்ள போகிறோம். நாம் எல்லா சங்கீதங்களில் மீதும் நாம் கவணம் செலுத்த போவதில்லை. மாறாக நமக்கு நம்முடைய வாழ்க்கைக்கும் பொறுத்திபோகும், சில பிரபலமான சங்கீதங்களில் மீது தான் நாம் நம்முடைய கவனத்தை செலுத்த போகிறோம். கீழே சங்கீத புத்தகத்தின் சிறு புறகுறிப்பை கொடுத்திருக்கிறேன், அது உங்களுக்கு பிரயோஜனமாய் இருக்கும் என நம்புகிறேன்.

நன்றி

R. ஜோஸ

## சங்கீத புத்தகத்தின் புற குறிப்பு:

**முன்னுரை:**

பழைய ஏற்பாட்டில் பாடல் புத்தகங்கள் என்று அறியப்படுகிற ஐந்து புத்தகங்களில் ஒன்றாக சங்கீதம் இருக்கிறது. ஒரு தேவனுடைய பிள்ளையாக நாம் தேவ பக்தியான வாழ்க்கை வாழ்வதற்கு சங்கீதம் நமக்கு உதவியாக இருக்கிறது (ரோம 15:4). இந்த சங்கீத புத்தகத்திலிருந்து அநேக சங்கீதங்களை கிறிஸ்தவர்களாகிய நாம் பாடலாக பாடிக்கொண்டும், போதித்து புத்தி சொல்லி கொண்டும் இருக்கிறோம். உதாரணத்திற்கு சங்கீதம் 128, சங்கீதம் 23, சங்கீதம் 42, சங்கீதம் 55:22, சங்கீதம் 91, சங்கீதம் 121, இதே போன்ற பாடல்களை நாம் நம்முடைய ஆராதனையிலும், அன்றாட வாழ்க்கையில் பாடி தேவனை துதிக்கிறோம். நாம் சங்கீதங்கள் மூலமாய் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்ற கட்டளையை புதிய ஏற்பாட்டில் பெற்றுள்ளோம். "**<u>சங்கீதங்களினாலும்</u>** கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் **<u>புத்திசொல்லிக்கொண்டு</u>**, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி," எபே 5:19; "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; **<u>சங்கீதங்களினாலும்</u>** கீர்த்தனைகளினாலும் **<u>ஞானப்பாட்டுகளினாலும்</u>** ஒருவருக்கொருவர் **<u>போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு</u>**, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி;" – கொலோ 3:16; "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் **<u>சங்கீதம் பாடக்கடவன்"</u>**. யாக் 5:13; "உம்முடைய நாமத்தைச் சொல்லி, **சங்கீதம் பாடுவேன்** என்று எழுதியிருக்கிறது." – ரோம 15:9. இந்த சங்கீதங்களில் இருந்து கிடைக்கும் போதனையும், ஞானமும் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்ப்படுத்துகிறது.

**நோக்கம் மற்றும் மைய கருத்து:**

சங்கீதம் என்பதற்கான எபிரெயபெயருக்கு "துதிகளின் புத்தகம் என்று அர்த்தம். இது யூதர்களின் பாடல் புத்தகம் என்று அறியப்படுகிறது. சங்கீதங்கள் நம்முடைய இருதயத்தின் மகிழ்ச்சி மற்றும் உணர்ச்சியின் வெளிப்பாடாக இருக்கிறது (எபே 5:19; எபி 13:15). இந்த சங்கீத புத்தகம் அநேக மக்கள்களின் விருப்பமான புத்தகமாய் இருக்கிறது. இந்த புத்தகத்தின் மைய கருத்தாக இருப்பது **"துதியும், ஜெபமும்"**. (சங் 150:6; சங் 136). இந்த சங்கீத புத்தகம் கிறிஸ்துவைப்பற்றிய அநேக தீர்க்க தரிசனங்களை கூறியிருக்கிறது (லூக் 24:44), (சங் 2; சங் 40:6-8; சங் 45:4-7; சங் 110:1-6, சங் 78:1,2). பழைய ஏற்பாட்டின் வேறு எந்தப் புத்தகத்தைக் காட்டிலும் சங்கீதங்களின் புத்தகத்தில் இருந்து அதிகமான குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. புதிய ஏற்பாட்டில் உள்ள 283 பழைய ஏற்பாட்டு மேற்கோள்களில், 116 சங்கீதத்தில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.

**ஆசிரியர்கள்:**

பொதுவாக சங்கீத புத்தகத்தின் ஆசிரியராக தாவீது கருதப்படுகின்றார் (2 சாமு 23:1,2; லூக் 20:42). ஆனால் உண்மையில் தாவீது 73 சங்கீதங்களை மட்டுமே பாடினார். மேலும் மோசே (சங் 90), ஆசா 12 (1 நாளா 16:1-7), கோரா 10, சாலொமோன் 2, இன்னும் அநேகர் இந்த சங்கீதத்தை பாடியுள்ளனர். ஆனால் உண்மையில் இந்த சங்கீத புத்தகத்தின் ஆசிரியராக இருப்பவர் தேவன் மாத்திரமே ( 2 தீமோ 3:16), இந்த ஆசிரியர்கள் தேவனின் கருவிகள் மட்டும் தான். கடைசியாக எஸ்ரா மற்றும் நெகேமியாவினால் இது நிறைவு பெற்றதாக நம்பப்படுகிறது.

சங்கீத புத்தகத்தின் பிரிவு:

1. சங்கீதம் (1-41) – தாவீதின் சங்கீதங்கள் (தாவீதின் அனுபவங்களின் மீது கவனம் செலுத்துகின்றது).
2. சங்கீதப் (42- 77) - ராஜாவாகிய தாவீதின் சங்கீதம்.
3. சங்கீதம் (78- 89) – பல புலம்பல்கள் மற்றும் கடினமான நேரங்களை அடையாளப்படுத்துகின்றன.
4. சங்கீதம் (90-106) – தேவன் சர்வத்தை ஆளுகிறவர், மனிதன் சாவுக்குரிய தன்மை
5. சங்கீதம் (107- 150) – தேவனை துதிக்கும சங்கீதங்கள்.

சங்கீதப் புத்தகம் பெரும்பாலும் "வேதாகமத்தின் இதயம்" என்று அழைக்கப்படுகிறது. இது 150 பாடல்கள், ஜெபங்கள் மற்றும் பாடல்களின் தொகுப்பாகும். இந்த சங்கீதங்கள் நம்முடை (மனித) உணர்ச்சிகளின் முழு அளவையும் பிரதிபலிக்கின்றன - மகிழ்ச்சி, துக்கம், பயம், நம்பிக்கை மற்றும் தைரியம். தாவீது, ஆசாப், மோசே, சாலமன் மற்றும் பல எழுத்தாளர்களால் எழுதப்பட்ட இந்த சங்கீதங்கள், பல நூற்றாண்டுகளாக தேவனின் பிள்ளைகளாகிய நமக்கு ஊக்கமளிக்கும் ஒரு மூலமாக இருந்து வருகின்றன.

வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனுடன் நம்முடைய உறவே சங்கீதங்களின் மையக் கருப்பொருளாக இருக்கின்றன. இந்த சங்கீதங்ளை எழுத்திய எழுந்தாலர்கள் ஆசீர்வாதத்தின் மலையின் உச்சியில் இருந்தாலும் சரி அல்லது விரக்தியின் பள்ளத்தாக்கில் இருந்தாலும் சரி! உதவி, வழிகாட்டுதல் மற்றும் ஆறுதலுக்காக அவர்கள் தேவனிடமே திரும்பினார்கள்.

**எப்படி சங்கீதங்கள் நமக்கு நம்பிக்கையை கொடுக்கின்றன?**

1. துன்பத்திலும், ஆபத்துக்காலத்திலும் தேவன் நம்முடன் தான் இருக்கிறார் என்கிற அறிவை தருவதன் மூலமாய் நமக்கு நம்பிக்கை தருகின்றன.(சங்கீதம் 46:1)
2. தேவன் நமக்கு தரும் பாதுகாப்பு, ஆறுதல் மற்றும் விடுதலைப்போன்றவற்றை நாம் பார்க்கும் போது அதிலிருந்து நாம் நம்பிக்கையை பெற்றுக்கொள்ளலாம்.(சங்கீதம் 91)
3. அவர் மேய்ப்பனாக இருந்து வழி நடத்துகிறார் என்பதை, நாம் அறிந்துக்கொள்வதன் மூலமாய்.(சங்கீதம் 23)
4. மனிதன் வாக்கு தேல்வி அடைந்தாலும், தேவனின் வாக்குத்தத்தம் தோல்வி அடையது என்பதன் மூலமாய் (சங்கீதம் 136)
5. தேவனை கடைசியில் வெற்றிக்கொள்வார் என்பதன் மூலமாய்.(சங்கீதம் 27)

**21 ஆம் நூற்றாண்டில் இந்த சங்கீதங்கள் ஏன்\எப்படி முக்கியமானது?**

நமது நவீன உலகில், நாம் பதட்டம், நிச்சயமற்ற தன்மை, உடைந்த உறவுகள் மற்றும் விரைவான மாற்றங்களை எதிர்கொள்கிறோம். தொழில்நுட்பம் முன்னேறியிருக்கலாம், ஆனால் மனித இதயம் இன்னும் பயம், வலி மற்றும் தனிமையுடன் போராடுகிறது என்பது தான் உண்மை. ஆயிரக்கணக்கான

ஆண்டுகளுக்கு முன்பு சங்கீதக்காரர்களைப் போலவே, நாமும் அமைதி, நம்பிக்கை மற்றும் உறுதிப்பாட்டிற்காக ஏங்குகிறோம். சங்கீதங்கள் அந்த இடைவெளியைக் குறைக்கின்றன - அவை பண்டைய ஜெபங்களை எடுத்து இன்று நமக்காக உயிர்ப்பிக்கின்றன.

**நமது கவனம்**

நாம் 150 சங்கீதங்களையும் படிக்கப் போவதில்லை, ஆனால் நமது தனிப்பட்ட, குடும்ப மற்றும் சமூக வாழ்க்கைக்கு நம்பிக்கையையும் பலத்தையும் தரும் மிகவும் பொருத்தமான சில சங்கீதங்களை நாம் கூர்ந்து கவனிப்போம். இவை நமக்கு உதவும்.

1. தேவனின் வாக்குறுதிகளில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும்.

2. மன அழுத்தம் மற்றும் துன்ப காலங்களில் ஆறுதலைக் கண்டறியவும்.

3. அன்றாட சவால்களை எதிர்கொள்ள தைரியத்தைப் பெறுங்கள்.

சங்கீதம் 23

PSALM 23

1. **கர்த்தர்** என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.

2அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

3அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

4நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

5என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

6என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் **கர்த்தருடைய** வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.

**அறிமுகம்:**

சங்கீதம் 23 என்பது கர்த்தர் ஒரு மேய்ப்பனைப் போல தனது மக்களுக்கு வழிகாட்டி, பாதுகாத்து, தேவைகளை நிறைவேற்றும் நம்பிக்கை மற்றும் ஆறுதலைக் கூறும் ஒரு தாவீதின் சங்கீதமாகும். இதை தாவீது எழுதியதாகக் கருதப்படுகிறது, மேலும் இது கர்த்தரின் அன்பு மற்றும் பராமரிப்பின் முக்கியத்துவத்தை விவரிக்கிறது, குறிப்பாக "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், எனக்கு ஒன்றும் குறைவு இல்லை" என்ற புகழ்பெற்ற வரியுடன் தொடங்குகிறது

இந்த சங்கீதத்தை பாடியது தாவீது என பொதுவாக நம்பப்படுகிறது. தாவீது தன்னுடைய சொந்த வாழ்க்கையில் இருந்து, தேவனின் பாதுகாப்பையும், பாரமரிப்பையும் அவர் பார்த்திருக்கிறார் என்பதிலிருந்து இது பாடப்படுகிறது.

a. **" கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்"(வ 1)** – இப்பொழுது இந்த இடத்தில் யார் மேய்ப்பனாக இருக்கிறார்? கர்த்தர் மேய்ப்பனாகவும், தாவீது ஆடாகவும் இருக்கிறார் தாவீது இந்த இடத்தில் தன்னை ஒரு பலவீனமான, மேய்ப்பனை மாத்திரம் சார்ந்து இருக்க கூடிய மற்றும் கவனிப்பு தேவைப்படுகிற ஒரு

சாதாரண ஆடாக பார்க்கிறார். இந்த சங்கீதத்தை பொறுத்த வரை நம்மை ஒரு ஆடாக நாம் பார்த்து, தேவனை ஆட்டின் மேய்ப்பனாக பார்த்தால் நம்மால் இந்த சங்கீதத்தை புரிந்துக்கொள்ள முடியும். ஒரு மேய்ப்பனிடம் இருந்து ஒரு ஆட்டிற்கு என்னவெல்லாம் தேவைப்படும்?

i. உணவு (வ 2)
ii. வழி நடத்தல் (வ 3)
iii. பாதுகாப்பு (வ 4)
iv. பராமரிப்பு (வ 5)

இவை அனைத்தும் தேவன் நமக்கு தருகிறார் என இந்த சங்கீதம் நமக்கு நம்பிக்கை தருகிறது. புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து நம்முடைய மேய்ப்பன் என நாம் பார்க்க முடிகிறது. (யோவான் 10:11; 1 பேது 5:4; வெளி 7:17). நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பராமரிப்பும், உதவியும் மற்றும் சரியான பாதையில் வழி நடத்தப்படுதலும் நமக்கு எவ்வளவு அதிகமாய் தேவைப்படுகிறது. உபத்திரவத்தின் மத்தியில் இருக்கிற நம்மை இயேசு கிறிஸ்து வழி நடத்துகிறராய் இருக்கிறார். “வெளிப்படுத்தின விசேஷம் 7:17 சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே **இவர்களைமேய்த்து,** இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு **நடத்துவார்**; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் **துடைப்பார்** என்றான்” – வெளி 7:17. இது உங்களுக்கு ஆறுதலை தருகிறதா? உங்கள் மனதிற்கு இது இளைப்பாறுதலை தருகிறதா? இந்த மேய்ப்பன் மரிப்பது இல்லை எனவும், இவர் மாறிப்போக மாட்டார் எனவும் (எபி 7:24,25) நாம் படிக்கிறோம்.

b. **“மேய்த்து” “என்னைக் கொண்டுபோய் விடுகிறார்” (வ 2) –** ஒரு மேய்ப்பன் இல்லாத ஆட்டை நீங்கள் கற்பனை செய்து பாருங்கள். அது தன்னுடைய போக்கில் போகும், சுவற்றில் இருக்கும் போஸ்டர்களால் தன்னுடைய வயிற்றை நிரப்பும். ஆனால் மேய்ப்பன் இருக்கிற ஆடானது அப்படி இருக்காது, மேய்ப்பன் தன்னுடைய ஆட்டை எந்த இடத்தில் கொண்டு வந்து விட்டால், அது ஆட்டிற்கு பிரயோஜனமாய் இருக்கும் என்பதை அந்த மேய்ப்பன் அறிந்திருப்பார். அதைப்போல தான் நமக்கு நம்மை போஷிக்க தேவனுக்கு எங்கே கொண்டு நம்மை விட வேண்டும் என தெரியும். (யோவா 10:9.10). சில மேய்ப்பன் இல்லாத ஆடுகள் தண்ணீரை கடப்பதற்கு முயற்சி செய்து இறத்துப்போகும், ஆனால் மேய்ப்பன் இருக்கிற ஆடுகளுக்கு அப்படி நடக்காது, அவைகளுக்கு மேய்ப்பன் இருக்கிறப்படியால் அந்த ஆடுகள் பாதுகாப்பாய் இருக்கும். ஒரு ஆட்டிற்கு புல்லும் தண்ணீரும் அடிப்படையான தேவைகள், அதனுடைய வளர்ச்சிக்கு அவைகளுக்கு இந்த இரண்டுமே முக்கியமானது, அப்படியே நம்முடைய வாழ்க்கையில் நமக்கு என்ன தேவை என்பதை தேவன் அறிந்திருக்கிறார். நாம் தாழ்ச்சி அடைய மாட்டோம்,

c. **“தேற்றி” “நீதியின் பாதையில் நடத்துகிறார்” (வ 3) -** அடுத்தது ஒரு மேய்ப்பன் ஆட்டுக்கு செய்ய வேண்டியது, சரியான பாதையில் வழிநடத்துவது, மேய்ப்பன் இல்லாத ஆடுகள் வழி மாறி தான் போகும் இடத்திற்கு செல்லாமல், வேறே இடத்திற்கு போகும், தொலைந்துப்போகும். ஆனால் மேய்ப்பன் இருக்கம் ஆடுகள் அப்படி இருக்காது. அதைப்போலவே நம்முடைய தேவன் கூட நம்மை அவருடைய நீதியின் பாதையில் நடத்துகிறார் என்பது நம்முடைய நன்மைக்கானது என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். மத்தேயு 6:33 –யில் நாம் தேவனுடைய நீதியை தேட வேண்டும் என்பதை நாம் வாசிக்கிறோம்.

d. **“பயப்படேன், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்” (வ 4) –** பயமானது, எவ்வளவு மோசமானது. அது வேதனையுள்ளது (1 யோவா 4:18). ஆடுகளுக்கு ஆபத்தும், பிரட்சனையும் வரும் போது மேய்ப்பன் தன்னுடைய கோலையும், தடியையும் கொண்டு அந்த ஆடுகளுக்கு அவன் ஆறுதலை கொடுக்கிறார். சில ஆடுகள் மலையில் மேல் அல்லது மலையின் பாதையில் சிக்கிக்கொள்ளும் போது அந்த ஆடுகளை காப்பாற்ற மேய்ப்பன் தன்னுடைய கையில் இருக்கும் வளைந்த கோலைப்பயன்படுத்துவான். அதைப்போலவே நம்முடைய வாழ்கையில் தேவன் நம்முடன் இருக்கிறார் என்கிற நம்பிக்கை நம்மை பலப்படுத்துகிறது என்பதோடே, நம்மை உற்சாகப்படுத்துகிறது. எபிரெயர் 13:5,6. நாம் ஆபத்தில் மட்டிக்கொள்ளும் போது தேவன் நம்முடன் இருக்கிறார், அவர் நம்மை வழி நடத்துவார் என்கிற தன்நம்பிக்கையை நமக்கு தருகிறது.

e. **“ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்” (வ 5) –** ஆட்டிற்கு சத்துருவாய் இருப்பது எது? அந்த ஆட்டிற்கு எதுவெல்லாம் ஆபத்தாக இருக்கிறதோ! அதுவெல்லாம் அந்த ஆட்டிற்கு எதிரிதான் அல்லவா! இந்த இடத்தில் எண்ணெய் என்பது மருந்தை அடையாளப்படுத்துகிறது. ஒரு மேய்ப்பன் தன்னுடைய ஆட்டிற்கு எதிரிகளிடமிருந்து பாதுகாப்பை மாத்திரம் கொடுக்காமல், அதை பாராமரிப்பும் செய்கிறான், அது காயப்படும் போது மருந்தும் தருகிறான். நம்முடைய மேய்ப்பனும் இப்படியாக இருக்கிறார். அவர் நம்முடைய காயங்களுக்கு மருந்துப்போடுகிறார். பாவம் என்பது எவ்வளவு கொடிதானது காயம் என நாம் படிக்கிறோம். (சங்கீதம் 38:3-5) நம்முடைய காயங்களை நம்முடைய மேய்ப்பன் அவருடைய காயங்களினால் குணப்படுத்துகிறார். “நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; **அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்**" 1 பேதுரு 2 :24. நம்முடைய எதிரியாக இருப்பது பிசாசு என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

f. **““நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்”** (வ 6) – இந்த சங்கீதமானது நம்பிக்கையின் வார்த்தையோடே இங்கு முடிவடைகிறது.

நன்மையும், கிருபையும் என் ஜீவனுள்ள நாளெல்லாம் என்னை தொடரும். நாம் எல்லாரும் நம்முடைய வாழ்க்கையில் நல்லது நடக்காதா? என நன்மைக்கு பின்னாக ஓடுக்கிறோம். ஆனால் நன்மை நமக்கு பின்பாக வருவதாக நாம் இங்கே படிக்கிறோம். ஏன்னெற்றால் மேய்ப்பன் நம்முடன் இருக்கிறார்.

இப்பொழுது நாம் செய்ய வேண்டியது என்ன? நாம் நம்முடைய மேய்ப்பனின் மந்தையில் இருப்பது தான். இங்கே தாவீதும் இதை தான் கூறுகிறார். நான் அவருடைய வீட்டில் நிலைத்திருப்பேன் என்று. அவருடைய வீடாக புதிய ஏற்பாட்டில் இருப்பது, அவருடைய சபைதான் (1 தீமோ 3:15). நமக்கு தேவையான சகல நன்மைகளும் அவருடைய வீட்டில் தான் இருக்கிறது, என்பதால் நாம் அவருடைய மந்தையில் ஆடுகளாக இருக்க வேண்டும் என்பது அவசியமாக இருக்கிறது. இப்படி அவருடைய வீட்டில் நாம் ஆடுகளாய் இருப்பதால், சங்கீதம் 23 -யில் சொல்லப்பட்டது போலவே கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார் என கூறி நாம் நம்பிக்கைவுடையவர்களாய் இருக்க முடியும்.